MCOP 73/2013
ம.சா.1 கௌரி க/பெ சின்னபையன்
நாள் 13.03.2025

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என் மகன் தமிழரசன் விபத்தில் இறந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து என் கணவரின் பங்காளி மகன் ஆறுமுகம் என்பவா் தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்பதால் என்ன நடந்தது என்பதை பற்றி என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான்.

2. விபத்தானது என் மகன் டிராக்டரில் மட்காடில் உட்கார்ந்து செல்லும் போது ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த டிராக்டர் எங்கள் ஊரை சேர்ந்த ராமன் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அதே ராமன் தான் டிராக்டரை விபத்து சமயத்தில் ஓட்டி சென்றார் என்றால் சரிதான்.

3. நான் விசாரித்த வகையில் டிராக்டர் மேடு பள்ளத்தில் ஏற்றப்பட்டு மட்காடில் உட்கார்ந்து இருந்த என் மகன் கீழே விழுந்து டிராக்டரில் பின் சக்கரம் அவன் தலையில் ஏறி இறங்கி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இராமனுக்கு டிராக்டரை ஓட்டுவதற்கான ஓட்டுநா் உரிமம் இருந்ததா அல்லது இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. விபத்து சமயத்தில் டிராக்டரின் உரிமையாளா் மற்றும் ஓட்டுநரான ராமனுக்கு ஓட்டுநா் உரிமம் இல்லை என்றும் அதனால் அவா் சார்பாக 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைபட்டது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் இறந்த தமிழரசன் மற்றொரு மகனான கிரி ஆகியோர் பிள்ளைகள் ஆவார்கள்.

5. விபத்து சமயத்தில் என் மகன் தமிழரசனுக்கு 12 வயது இருக்கும் என்றால் சரிதான். 7ம் வகுப்பு படித்து கொண்டு இருந்தான். விபத்தில் இறந்த தமிழரசனுக்கு 1ம் மனுதாரர் ஆன சட்டப்படியான வாரிசு இல்லை என்றால் சரியல்ல.

6. சட்டப்படியும் விதிகளின்படியும் காப்பீட்டு பாலிசி நிபந்தனைகளின் படியும் டிராக்டரில் 1 நபா் தான் பயணிக்க முடியும் என்றும் அதனால் என் மகன் விபத்து சமயத்தில் விதிகளை மீறி டிராக்டரில் அமர்ந்து பயணம் செய்ததால் விபத்து ஏற்பட்டது என்றும் அவ்வாறு ஏற்பட்ட விபத்துக்கு 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் பொறுப்பேற்க முடியாது என்றால் சரியல்ல.

7. விபத்து ஏற்படுத்திய வாகனமான டிராக்டரில் பதிவு சான்றிலும் 1 நபர் தான் பயணிக்க முடியும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேலும் காப்பீட்டு பாலிசியின் படி ஒரு நபருக்கு தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் என் மகனின் இறப்பிற்கு 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் பொறுப்பேற்க முடியாது என்றால் சரியல்ல.

8. விபத்து சமயத்தில் என் மகனுக்கு 12 வயது என்பதை நிரூபிக்க அவனது பிறப்பு சான்று அல்லது கல்வி சான்று எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் மகன் விதிகளை மீறி டிராக்டரில் பயணம் செய்ததாலும் டிராக்டர் ஓட்டுநா் ராமனுக்கு முறையான ஓட்டுநா் உரிமம் இல்லை என்பதாலும் விபத்து இழப்பீடு வழங்க 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் பொறுப்பேற்க முடியாது என்றால் சரியல்ல.